RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
OPEN ACCESS

# குறிஞ்சித்தேன் காட்டும் குடும்ப அமைப்பு

**மு. சத்தியா [அ, *], சா.வனிதா [அ]**

[அ] முதுகலைத் தமிழியல் மற்றும் உயராய்வு துறைத் துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை-600032, தமிழ்நாடு, இந்தியா

# The Family Structure Depicted in Kurinjithen

**M. Sathiya [a, *], S. Vanitha [a]**

[a] PG & Research Department of Tamil, Chellammal Women's College, Guindy, Chennai -600032, India

* Corresponding Author:
Sathiya.bsj@gmail.com

Received: 08-12-2025
Revised: 22-02-2026
Accepted: 09-03-2026
Published: 16-03-2026

Check for updates

**ABSTRACT**

Regardless of the language in which literature originates, it is always centered around the people living there, their families, and their society.In that respect, Rajam Krishnan's novels are mostly based on events that have happened and are happening in society, and her works are created using these events.Families and their relationships change with time. This study examines In this way, the mindset of the Badaga community is depicted, their family structure and the extent to which it has changed due to the passage of time, as well as various aspects such as the duties, rights, and expectations of women in the novel Kurinjithen.

**Keywords:** Family, Leadership, Feminism, Family Responsibilities, Society, Joint family.

## முன்னுரை

உலகில் நிகழும் பல்வேறு சமுதாய பிரச்சனைகளையும் குடும்பச் சிக்கல்கள் பெண்ணிய பிரச்சனைகள் என பல்வேறு சூழ்நிலைகளையும் கண்டும் காணாததை போல் இல்லாமல் அவர்களுடன் நேரடியாகவே பழகி அவர்களின் வாழ்வியல் பிரச்சனைகளையும் சமுதாய சிக்கல்களையும் கள ஆய்வாக பதிவு செய்யக்கூடிய எழுத்தாளர் தான் இராஜம் கிருஷ்ணன் அவர்கள். இன வரைவியலில் முதல் நாவலாக போற்றப்படுகின்ற குறிஞ்சித்தேன் படுக இன மக்களின் வாழ்வியலை மையப்படுத்துகிறது படுக இன மக்களின் குடும்ப அமைப்பு எவ்வாறு இருக்கிறது என்பதும் அக்குடும்பத்தில் எழக்கூடிய மன உணர்வுகளையும் மையப்படுத்தியதாக இக்கட்டுரை அமைகிறது.

## குடும்பம்

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே

வாளோடு முன் தோன்றிய மூத்த குடி" (புறப்பொருள் வெண்பாமாலை.35)

நம் தமிழ் மொழியானது மொழி அமைப்பிலும் பண்பாட்டிலும் சிறந்த விளங்குகின்றன. அக்காலத்தில் மக்கள் நில பிரிவுகளின் அடிப்படையிலே வாழ்வியலை அமைத்துக் கொண்டனர். ஆதி காலத்தில் நாடோடியாக வாழ்ந்த மக்கள் பின்னர் குடும்பம் என்ற கூட்டு வாழ்க்கை முறையில் வாழ தொடங்கினர். இக்கூட்டு வாழ்க்கை முறை முதன் முதலில் குறிஞ்சி நிலத்தில் தான் தோன்றியது. பிறகு முல்லை, மருதம், நெய்தல் என பல நிலங்களுக்கும் பரவத் தொடங்கியது. இக் குடும்ப அமைப்பு தான் மனிதன் நாடோடி நிலையிலிருந்து நாகரிக வளர்ச்சிக்கு மாற வித்திட்டது.

ஆற்றங்கரையோரம் மனிதன் வாழ முற்பட்ட பொழுதுதான் இவ்வமைப்பு தோன்றியிருக்க வேண்டும். குடும்பம் என்ற சொல்லானது முதன் முதலில் திருக்குறளில் தான் பயன்படுத்தப்பட்டுள்ளது.

"இடும்பைக்கே கொள்கலம் கொல்லே குடும்பத்தக்க

குற்றம் மறைப்பான் உடம்பு" (குறள்.1029)

என்பதனைக் காண முடிகிறது.

## குடும்பம் பற்றி அறிஞர்களின் கருத்துகள்

"குடும்பம் என்பது உறவுநிலை, திருமணம், சட்டப்பிணைப்பு, இவற்றுடன் தொடர்பு கொண்ட சமூக அங்கீகாரம் பெற்ற அலகாகும்" என்று அண்டர்சன் பார்க்கல் கூறுகின்றார்.

குடும்பம் சமுதாயத்தின் ஒரு சிறு அலகாகும். அவை சமுதாயக் குழுக்களாக இருப்பினும் சமுதாயத்தின் முழு பரப்பிலும் ஆக்கம் செலுத்துவது. சமுதாயத்தில் அங்கீகரிக்கப்பட்ட குடும்ப அமைப்பாகும். அவை மனித தேவைகளை அடைய உதவும் அமைப்பு. ஆண், பெண் சேர்ந்த குழுவே அவையே. ஆணும் பெண்ணும் கணவன் மனைவியாக சேர்ந்து வாழ்ந்தால் அது குடும்பமாக கருதப்படுகிறது வில்லியம் கப்பர்ட் பவுல், ஆட்டர்ன் கிவ்ராப்ர்ட் போன்ற அறிஞர்கள் குடும்பம் என்ற சொல்லுக்கு பலவிதமான விளக்கம் தருகின்றனர்.

"குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினர்களும் உழைக்க வேண்டும் அதுதான் நல்ல குடும்பம்" (முனைவர் தா.கஜலட்சுமி வள்ளியம்மை. 2000) என்று மு வரதராசனார் கூறுகின்றார். "குடும்பத்தில் உறவு உண்டு, ஒழுக்கம் உண்டு, ஒருமைப்பாடு உண்டு, அஃதோர் அமைப்பு அவ்வமைப்புக்கு கால் கொள்ளும் இடம் குடும்பம்" என்று திரு.வி.க குடும்ப அமைப்பை தெளிவுபடுத்துகிறார்.

## குறிஞ்சித்தேனில் குடும்பம்

மாதைய்யனும் லிங்கையாவும் அண்ணன் தம்பிகளாக இருப்பினும் இவர்கள் இருவரும் ஒரு தாயின் மகன்கள் இல்லை. மூத்த தாரத்தின் மகன் லிங்கையா. இருப்பினும் அண்ணன், மாதைய்யாவின் அண்ணி நஞ்சம்மை குழந்தை ரங்கன், ஜோகி என அனைவரும் கூட்டுக் குடும்பமாய் வாழ்ந்தார்கள். பின் அவர்கள் குடும்பத்தில் நிகழும் பிரச்சனைகள் அவற்றின் மூலம் பிரிந்த குடும்பங்கள் என பல மாற்றங்களால் மலைவாழ் மக்களின் வாழ்வியலுடன் நம்மையும் வாழ வைத்துள்ளார்.

மேலும் "ஜோகி அண்ணா தங்கை பாப்பா வந்திருக்கிறது. அம்மா, மாமி, அத்தை எல்லாரும் வந்திருக்கிறாங்க பொறி உருண்டை, கடலை, ஆரஞ்சு எல்லாம் கொண்டு வந்திருக்காங்க" (இராஜம் கிருஷ்ணன்.1997.) என மகிழ்ச்சியின் வெளிப்பாடுகள் மூலம் கூட்டுக் குடும்பத்தின் பெருமையை அறிய முடிகிறது.

"காக்கை தான் கூட்டு கட்டும் குயில் கூடு கட்டுவதில்லை குயில் கூடு கட்டுவதில்லை என்று காக்கை ஒரு குயில் குஞ்சுகள் கூட வளர்க்காமல் விடுவதில்லை"(இராஜம் கிருஷ்ணன்.1997.) மேலும் மனையில் வாழும் மற்றவரிடமெல்லாம் சகோதர முறை கொண்டு வாழும் வாழ்க்கையில் அண்ணன் என்ன தீங்கு செய்தான் அவன் குடும்பத்தை பட்டினி போட? இந்த வீட்டில் முதலில் பிறந்த அண்ணன் ஐயனுக்கு சமானம் போன்ற வரிகள் அவர்களின் கூட்டு வாழ்க்கையை நமக்கு தெளிவுபடுத்துகின்றன.

குடும்பத்தில் திருமணமான அண்ணன் தம்பி என ஒன்றாக ஒரே வீட்டில் ஒன்றாக வாழ்ந்தாலும் அவர்கள் அனைவரும் கூட்டுக் குடும்பம் என்று அழைக்கப்படுவர். இக்குடும்பத்தின் அடித்தளமே ரத்த உறவு தான் இதனால் தான் இதனை ரத்த உறவு குடும்பம் (Consanguina Family) என்று அழைப்பதாகவும் இத்தகைய ரத்த உறவு கொண்டவர்களை மையப்படுத்தியே குடும்பங்கள் அமைந்தால் இவையே கூட்டுக் குடும்பம் என்று வாழ்வியல் களஞ்சியம் கூறுகிறது.(வாழ்வியல் களஞ்சியம் தொகுதி 7. கா கேட்டோ தமிழ் பல்கலைக்கழகம் தஞ்சாவூர் பக்கம் 594)

## குடும்பத்தில் ஆணின் பொறுப்புகள்

இந்நாவலில் ஆண் பெண் என்ற பாகுபாடின்றி தன் குடும்பம் தன் சமூகம் என்னும் அக்கறை கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்பதனை "மகனே பொறுமையாக கேள் கல்யாணம் என்பது எதற்கு? நாம் கூடி வாழ்ந்த பூமி திருத்தி விளைவிக்க வேண்டும். கன்று, காலிகள் பெருக வேண்டும். ஆணும் பெண்ணும் வாழ்வில் இதற்காக தான் பங்கு கொள்ள வேண்டும்"(இராஜம் கிருஷ்ணன்.1997.) இவற்றில் ஓர் ஆண் திருமணம் என்ற பந்தத்தில் வாழ்வதற்கும் அவற்றின் மூலம் அவனின் அடுத்த தலைமுறையை உருவாக்குவதற்கும் ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்கு வழி வழியாக பழக்க வழக்கங்கள், நம்பிக்கை, கதைகள், கருத்துகள் என பின்பற்றுவதையே மரபு என்றும் அந்த மரபே இந்த கால சமுதாயம் முதல் எதிர்கால குடும்பம் சமுதாயம் முன்னேறுவதற்கும் இந்த மரபே இயக்கற்றலாக விளக்குகிறது.

## குடும்பத்தில் பெண்ணின் நிலை

"பெண் அடுப்புத் தீப்போல குடும்பத்தை நல்லவிதமாக உருவாக்கும் சக்தி அவள் புகையலாமா? பாலைக் குடிக்காமல் வீட்டுக்காக தியாகம் செய்யும் சக்தி ஒளிர, இந்த வீட்டுக்கு நீ வருகிறாயம்மா. மங்களத்துக்கு உரியவளாக சீர்குலைந்து வரும் ஒரு குடும்பச் செல்வத்தை நிரப்ப நீ வருகிறாயம்மா. சின்ன எண்ணங்களை விட்டுவிட்டு பெரிய பொறுப்புகள் உன்னை தேடி வந்துவிட்டது. அன்பு இன்றி தேய்ந்த ஓர் உள்ளத்துக்கு ஆக்கமறிந்து நல்ல குடும்பமாக ஒளிர ஒளி கூட்ட வருகிறாயம்மா"(இராஜம் கிருஷ்ணன்.1997.)

பாரு என்ற பெண்ணின் பாத்திரம் படகர்க்கு உரிய உழைப்பின் சக்தியாக விளங்குவதையும் ரங்கனுக்கு மனைவியானவுடன் தன் தாலிக்கு மதிப்பு அளித்து குடும்ப பெருமைகளை காப்பாற்றும் பொறுப்பு மிக்கவளாக விளங்குகிறாள். குடும்பம், காதல், பொறுப்பு, தனிமை மற்றும் தாய்மை என மாறிமாறி காட்சியளிக்கும் பாருவின் பாத்திரப் பண்பு குடும்ப அமைப்பை சிறப்பு செய்வதாக உள்ளது.

இவ்வுலகில் நிலையான நிலைத்த வாழ்க்கை வாழ இல்லறம் என்னும் குடும்ப வாழ்க்கையை புரிந்துகொண்டு மனையறம் செய்ய வேண்டும். தம் உறவுகளுடன் இவ்வுலகில் நிலைத்த நிலையாக வாழ்வதற்கு வழி செய்கிறது.

## முடிவுரை

திருமணம் ஆண் பெண், அவளுடைய கணவன் மூலம் கிடைக்கும் குடும்பம், அவர்களை கவனித்தல், தாய்மை போற்றுதல் என பொறுப்புகள் மிகுந்து காணப்பட்டது. மேலும் சமுதாய நெறிகளை மீறுதல் கூடாது, பழக்கவழக்கங்களில் தவறு நடைபெறுதல் கூடாது, வாய்மொழி கோட்பாடுகளை வரன்முறையோடு அறிந்து செய்தல் வேண்டும் என இவையெல்லாம் மரபு என்ற கோட்பாடுகளில் கூறப்பட்டாலும் இராஜ்யம் கிருஷ்ணன் அவர்கள் இதனை "குடும்ப வரைமுறைகள்" என்ற பொருண்மையிலே பயன்படுத்துகின்றார். குடும்பம் என்பது மரபையும், நம்பிக்கையையும் தலைமுறைகளிலிருந்து மற்றொரு தலைமுறைகளுக்கு எடுத்து செல்கிறது என்பதனை அவரின் நாவல்கள் மூலம் சித்தரிக்க முயல்வதை அறியலாம்.

## References

ராஜம் கிருஷ்ணன் (1997) குறிஞ்சித்தேன்.

தா.கஜலட்சுமி வள்ளியம்மை (2000) டாக்டர் மு.வ அவர்களின் வாழ்வியல் கோட்பாடு.

வாழ்வியல் களஞ்சியம் தொகுதி 7. - கா கேட்டோ தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

திருவள்ளுவர் (1965) திருக்குறள்.

ஐயனாரிதனார் (1999) புறப்பொருள் வெண்பாமாலை.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author's have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License